ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2022.07.07 |

**நாணயக்கொள்கை மீளாய்வு : இல. 05 – 2022 யூலை**

# இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலையினை மேலும் இறுக்கமாக்கியுள்ளது

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது 2022 யூலை 06ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 14.50 சதவீதத்திற்கும் 15.50 சதவீதத்திற்கும் 100 அடிப்படை புள்ளிகளால் அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. அண்மையில் எதிர்பார்த்ததை விட உயர்வாக முதன்மைப் பணவீக்கம் உயர்வடைந்தமை அத்துடன் எதிர்வரவுள்ள காலப்பகுதியில் அதிகரித்த விடாப்பிடியான உயர்வான பணவீக்கம் என்பவற்றை கவனத்திற் கொண்டு, நாணயக் கொள்கையினை மேலும் இறுக்கமடையச் செய்தலானது ஏதேனும் பாதகமான பணவீக்க எதிர்பார்க்கைகள் அதிகரிப்பதனைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமானதாகவிருக்குமென சபை அபிப்பிராயப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை மேற்கொள்கையில், சபையானது அண்மைக்காலத்தில் அனைத்து பொருளாதார துறைகளுக்கிடையிலும் ஏதேனும் விலை அழுத்தங்கள் உயர்வடைதலின் பரந்தளவான பாதகமான விளைவுகளுக்கு எதிராக, ஏனையவைகளுக்கு மத்தியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்தப் பொருளாதார நடவடிக்கைகள் அத்துடன் நிதியியல் துறை செயலாற்றம் என்பவற்றின் மீது இறுக்கமான நாணய நிலைமைகளின் தாக்கத்தின் மீது கவனம் செலுத்தியிருந்தது. அனைத்து காரணிகளையும் பரிசீலனையிற் கொள்கையில், இக்கொள்கை சீராக்கமானது நடுத்தரகாலத்தில் பணவீக்க எதிர்பார்க்கைகளை முதன்மைப் பணவீக்கத்தின் இலக்கிடப்பட்ட அளவிற்கு அண்மித்து நிலைநிறுத்துவதற்கு உதவுவதற்கு வழிகாட்டுகின்ற அதேவேளை பொருளாதாரத்தில் ஏதேனும் ஏதுவாகின்ற கேள்வி அழுத்தங்கள் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துமென சபை அபிப்பிராயப்பட்டுள்ளது.

## உலகம் முழுவதும் மத்திய வங்கிகள் அதிகரித்தளவில் இறுக்கமான கொள்கையினை கடைப்பிடிக்கின்றன

உலகம் முழுவதுமுள்ள மத்திய வங்கிகள், புவிசார் அரசியல் பதற்றங்களிலிருந்து தோன்றுகின்ற உயர்வான பெற்றோலிய, மற்றும் உணவு விலைகளினால் நெருக்குதல்களுக்குள்ளான தொடர்கின்ற பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்தி பணவீக்க எதிர்பார்க்கைகளை வலுவிழக்கச்செய்வதற்கு அவற்றின் நாணயக்கொள்கையினைத் தொடர்ந்தும் இறுக்கமடையச் செய்கின்றன. எவ்வாறிருப்பினும், உலகளாவிய பணவீக்கப் பரம்பல், கணிசமான வட்டி வீத உயர்வுகள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் அதிகரித்தல் என்பவற்றுக்கு மத்தியில், உலகளாவிய பொருளாதாரத்தின் எதிர்காலநோக்கு அண்மைக்காலங்களில் சீர்குலைந்துள்ளது. இந்நிகழ்வுகள் படிப்படியாக விருத்தியடைதல், எதிர்வரவுள்ள காலப்பகுதியில் வளர்ந்துவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைகின்ற பொருளாதாரங்கள் மீது பாரியளவில் எதிர்மறையான கசிவுத்தாக்கங்களை கொண்டிருக்கக்கூடும்.

**உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் குறுங்காலத்தில் குறிப்பிடத்தக்க சரிவினை பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் பிரகாரம், இலங்கைப் பொருளாதாரமானது 2022ஆம் ஆண்டின் முதற்காலாண்டில் ஆண்டிற்கு ஆண்டு 1.6 சதவீதம் கொண்ட சுருக்கத்தினைப் பதிவுசெய்திருந்தது. எரிசக்தி மற்றும் மின்சக்தி பற்றாக்குறைகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியான நிரம்பல்பக்க இடையூறுகளால் 2022இன் இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டுப் பக்கத்தில் பாதமாக அபிவிருத்திக்கு மத்தியில், உலகளாவிய பண்டச் சந்தைகளையும் நிரம்பல் சங்கிலிகளையும் பாதித்துள்ள கிழக்கு ஐரோப்பாவில் இடம்பெறும் புவிசார் அரசியல் பதற்றங்கள் குறுங்காலத்தில் உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் இடர்நேர்வுகளை தோற்றுவிக்கக்கூடும்.

**வெளிநாட்டுத்துறை தொடர்ந்தும் கடுமையான சவால்களை எதிர்கொள்கின்றது**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் தடைப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையுடன் ஒன்றிணைந்து அவசரமற்ற இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதனை இலக்காகக் கொண்டிருந்த கொள்கைசார் வழிமுறைகளினால் பாரியளவில் துணையளிக்கப்பட்டு வர்த்தகப் பற்றாக்குறையானது, 2022 மே மாதத்தில் கடந்த ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியினைக் காட்டிலும் கணிசமாகச் சுருக்கமடைந்திருந்தது. உள்நாட்டு மற்றும் உலகளாவிய இரண்டினதும் சார்பற்ற நிலைமைகளினால் பாதிக்கப்பட்டு தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலாத்துறை வருவாய்கள் என்ற வடிவிலான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்பட்டதைக் காட்டிலும் குறைவாகக் காணப்படுகின்றன. 2022 மாச்சில் கடுமையான குறுகியகால தேய்மானத்தை அனுபவித்த செலாவணி வீதம் 2022 மே மாதத்தின் நடுப்பகுதியிலிருந்து சந்தை வழிகாட்டல் அறிமுகப்படுத்தப்பட்டமையுடன் பரந்தளவில் உறுதியாகக் காணப்படுகின்றது. உபயோகம் மீதான நிபந்தனைகளுக்குட்பட்டதாகக் காணப்படுகின்ற ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.5 பில்லியனுக்குச் சமனான சீன மக்கள் வங்கியிடமிருந்து கிடைத்த பரஸ்பர நாணயப் பரிமாற்றல் ஒப்பந்த வசதி உள்ளடங்கலாக 2022 யூன் இறுதியிலுள்ளவாறான மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 1.9 பில்லியன் என மதிப்பிடப்பட்டிருக்கின்றது. அண்மைக் காலத்தில் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் மீது அலுவலர் மட்ட இணக்கப்பாட்டினை அடைந்துகொள்வதனை நோக்கி பன்னாட்டு நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை தொடர்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ள அதேவேளை குறுகிய கால நிதியளிப்பு வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கு பல்வேறுபட்ட இருபுடை மற்றும் பல்புடை பங்காளர்களுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், வெளிநாட்டுப் படுகடன் சீரமைத்தல் செயன்முறை தொடர்பில் துரிதமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்பாராத சென்மதி நிலுவை அழுத்தங்கள் அதேபோன்று தற்பொழுது பொருளாதாரத்தின் சகல துறைகளுக்கிடையிலும் நிலவுகின்ற கடுமையான அழுத்தங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, வெளிநாட்டுத்துறை உறுதிப்பாட்டினையும் ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினையும் உறுதிசெய்வதென்பது பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வளர்களிடமிருந்துமான கடைமைப்பொறுப்பினை வேண்டிநிற்கின்றது. இலங்கை ரூபாவின் உள்நாட்டு நாணய உறுதிப்பாட்டினையும் வெளிநாட்டு உறுதிப்பாட்டினையும் உறுதிசெய்வதற்காக மத்திய வங்கியினால்

அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகளுக்கு ஏனையவற்றுக்கு மத்தியில் அரசாங்கம், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், தனியார் துறை கூட்டுத்தாபனங்கள் மற்றும் வங்கி அத்துடன் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் ஆகியவற்றின் பாகத்திலிருந்து கிடைக்கும் ஒத்திசைவான அத்துடன் ஒரேநிலையான நடவடிக்கைகள் துணையளிக்க வேண்டும். நெருக்கடி முகாமைத்துவத்திற்கான அத்தகைய ஒருங்கிணைக்கப்பட்ட பதிலிறுப்பானது பொதுமக்கள் ஆதரவினை உறுதிசெய்து இறுதியாக எதிர்வரவுள்ள காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கையை இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்கு உதவும்.

**இறுக்கமான நாணய மற்றும் திரவத்தன்மை நிலைமைகளுக்கு பதிலிறுத்துவதில் சந்தை வட்டிவீதங்கள் தொடர்ந்தும் மேல்நோக்கி சீர்செய்யப்படும்**

இதுவரை காலமும் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கியமான நாணயக் கொள்கை இறுக்கமடையச் செய்தல் வழிமுறைகளின் ஊடுகடத்தலுடன் இணைந்து சந்தை வட்டிவீதங்கள் கணிசமாக மேல்நோக்கி சீர்செய்யப்பட்டுள்ளன. அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவுகளும் அண்மையில் உயர்வடைந்து தீவிரமடைந்த நிச்சயமின்மைகள், பணவீக்க உயர்வு மற்றும் தொடர்ச்சியாக அரசாங்கத்தின் பாரியளவிலான கடன்பெறுதல் தேவைப்பாடு என்பவற்றின் தாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது. தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் சாதனங்களின் வட்டிவீதக் கட்டமைப்பில் முரண்பாடுகள் அதிகரிப்பதற்கு இவ்வபிவிருத்திகள் வழிவகுத்துள்ளன. அதேவேளை, ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிரான இலங்கை ரூபாவின் தேய்வுத் தாக்கத்திற்காக சீராக்கம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி 2022 மே மாதத்தில் ஆண்டிற்காண்டு மெதுவடைகின்ற சமிக்ஞைகளைப் பதிவுசெய்துள்ள அதேவேளை, வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டு சொத்துக்களில் சுருக்கத்தினால் விரிந்தபணம் விரிவடைதல் அழுத்தம் கண்டுள்ளது. உயர்வடைந்த கடன்வழங்கல் வட்டிவீதங்களும் எதிர்வரவுள்ள காலப்பகுதியில் பண மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் விரிவாக்கத்தினை மெதுவடையச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை உயர்ந்தளவான வைப்பு வட்டி வீதங்கள் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் கணிசமானதொரு தொகையினை வங்கித்தொழில் முறைமையினுள் ஈர்க்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளின் நிதியியல் நிலையில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடுகள் உள்ளடங்கலாக இறை வளர்ச்சி முயற்சிகளை மீள்வலுவூட்டச் செய்வதற்கு அரசாங்க அரசிறைத் திரட்டலை வலுப்படுத்துவதையும் செலவினத்தை சீரமைப்பதையும் இலக்காகக் கொண்ட எதிர்பார்க்கப்பட்ட இறைசார்ந்த மறுசீரமைப்புகளை விரைவாக நடைமுறைப்படுத்தல் அவசியமாகின்றன. இறைசார்ந்த செயலாற்றுகையில் அத்தகைய சீர்படுத்தலானது எதிர்வரவுள்ள காலப்பகுதியில் அரசாங்கத்தின் மொத்த நிதியிடல் தேவைகளின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கலாம் என்பதுடன் நாணய ரீதியான நிதியீட்டத்தை விரைவான வேகத்தில் குறைப்பதற்கும் உதவக்கூடும்.

**பணவீக்கமானது ஆண்டின் எஞ்சியுள்ள காலப்பகுதியில் உயர்வடைந்து காணப்படுவதற்கு எறிவுசெய்யப்பட்டுள்ள போதிலும், அதன் பின்னர் பொருத்தமான கொள்கைசார்ந்த வழிமுறைகளுடன் சடுதியான வேகம் குறைந்த பணவீக்கப்பாதையொன்று எதிர்பார்க்கப்படுகின்றது**

ரூபா தேய்வடைதலின் தாக்கம், வரிச் சீராக்கங்கள் மற்றும் நாணய தளர்வின் நீடித்த தாக்கம் என்பவற்றுடன் இணைந்து உலகளாவிய வலு மற்றும் உணவு விலை உயர்வுகள் அத்துடன் அதனோடு இணைந்து உள்நாட்டு விலைகளுக்கு ஊடுகடத்தப்படுதல் என்பவற்றின் பிரதான காரணமாக முதன்மைப் பணவீக்கம் எதிர்பாராத அளவிற்கு உயர்வான மட்டத்திற்கு அதிகரித்துள்ளது. இக்காரணிகள்

அதேபோன்று அவற்றின் இரண்டாம் சுற்றுத் தாக்கங்கள் என்பவற்றின் மூலம் தூண்டப்பட்டு முதன்மைப் பணவீக்கம் குறுங்காலத்தில் மேலும் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலத்தில் நிரம்பல் நிலைமைகள் இயல்புநிலை அடைவதுடன் இணைந்து எதிர்பார்க்கப்படும் உலகளாவிய பண்ட விலைகள் இயல்பு நிலைக்கு திரும்புவதுடன் ஒருங்கிணைந்த தொடர்ச்சியான அத்துடன் பொருத்தமான சீராக்க கொள்கைசார்ந்த வழிமுறைகளுடன் முதன்மைப் பணவீக்கம் கீழ்நோக்கிய போக்கிற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் நடுத்தர காலத்தில் விரும்பப்பட்ட வீச்சிக்கு இசைவாகயிருக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. இறுக்கமான நாணய மற்றும் இறைசார்ந்த நிலைமைகளிலிருந்து உருவாகின்ற குறைவடைந்த கூட்டுக்கேள்வி அத்துடன் சாதமான புள்ளிவிபரத் தளத்தாக்கம் என்பனவும் எதிர்காலத்தில் பணவீக்க அழுத்தத்தினைக் குறைப்பதில் உதவும்.

**வரைபடம் 1**
**கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட காலாண்டு சராசரி முதன்மை பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு சதவீதம்)**




**குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடல்ல**

வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப்பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் மீது காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றது. விசேடமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளிகளை எடுத்துக்காட்டி உண்மையான பணவீக்க விளைவு இவ்விடைவெளிகளினுள் அமையப்பெறும் என்ற 50 சதவீத நிகழ்தகவினை உணர்த்துகின்றது. நம்பகபட்டி நீண்ட கிடையச்சில் எதிர்வுகூறல் பணவீக்கத்தின் அதிகரிக்கின்ற நிச்சமின்மையினைக் காட்டுகின்றது.

2022 யூலை எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்களை எறிவு பிரதிபலிக்கின்றது. எறிவானது 2023இன் தொடக்கத்தில் படிப்படியாக தளர்வடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற உலகளாவிய எரிபொருள் மற்றும் உணவு விலைகள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் குறைவான சாத்தியமான மட்ட வளர்ச்சி மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட நாணயக்கொள்கை நிலையினால் குறித்துக்காட்டப்பட்ட இறுக்கமடைகின்ற உலகளாவிய நிதியியல் நிலை ஆகிய நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேலும், உள்நாட்டு உணவு நிரம்பலானது 2023இல் முன்னேற்றமடையுமென ஊகிக்கப்படுகின்றது. இப்பணவீக்க எதிர்வுகூறலானது நடுத்தரகாலத்தில் இறை வளர்ச்சியின் முன்னேற்றம் உள்ளடங்கலாக மாதிரி ஒத்திசைவான கொள்கை சீராக்கங்கள் ஆகிய நிபந்தனைகுட்பட்டதாகும். உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிச்சயமின்மைகள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றைக் கருத்திற் கொள்கையில், தற்போதைய எறிவுடன் இணையப்பெற்ற இடர்நேர்வுகள் சாதாரண காலங்களைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் உயர்வானதாகும். இவ்வூகங்களில் காணப்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் உண்மையான பணவீக்கம் இவ்வெறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும். பணவீக்க எதிர்பார்க்கையில் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்கள் பற்றி கிரமமான அடிப்படையில் பொருளாதார முகவர்களுக்கு வெளிப்படையாக தொடர்பூட்டி அறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு அவர்களை இயலச் செய்வதற்கு மத்திய வங்கி அர்ப்பணித்துள்ளது.

**பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு கொள்கை வட்டிவீதங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன**

உலகளாவிய மற்றும் உள்நாட்டு நடப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை கவனமாகப் பரிசீலனையில் கொண்டதன் பின்னர் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது, 2022 யூலை 06ஆம் நாளன்று இடம்பெற்ற அதன் கூட்டத்தில் மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே

14.50 சதவீதத்திற்கும் 15.50 சதவீதத்திற்கும் 100 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளது. ஏனையவற்றுக்கு மத்தியில் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் மீதான சாத்தியமான விருத்தியினை அங்கீகரிக்கின்ற அதேவேளை சபையானது பொருளாதாரத்தில் ஏதேனும் ஏதுவாகின்ற கேள்வி அழுத்தங்களை மேலும் கட்டுப்படுத்துவதன் வாயிலாக பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கும் நாணயக்கொள்கை நிலையினை மேலும் இறுக்கமடையச் செய்வது அவசியமாகுமென அபிப்பிராயப்பட்டது. அவ்வாறு நாணயக் கொள்கையினை இறுக்கமடையச் செய்தலானது பணவீக்க எதிர்பார்க்கைகள் நடுத்தர காலத்தில் முதன்மைப் பணவீக்கத்தின் இலக்கிடப்பட்ட மட்டத்தினை அண்மித்து நிலைநிறுத்தப்படுவதை உறுதிசெய்யுமென சபை எதிர்பார்க்கின்றது. எவ்வாறாயினும், மத்திய வங்கியினால் பின்பற்றப்படும் பரிகாரக் கொள்கை சார்ந்த வழிமுறைகளானது சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய வகுப்பினருக்கு ஆதரவளிப்பதற்கான வினைத்திறன்மிக்க அத்துடன் செயல்திறன்வாய்ந்த சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்களுடன் ஒன்றிணைந்து இறை வளர்ச்சி வழிமுறைகளை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கான தேவை உள்ளடங்கலாக அரசாங்கத்தின் உரியகால மற்றும் பொருத்தமான கொள்கை சீராக்கங்களினால் நிறைவுவளிக்கப்படவேண்டும் என்பதனை சபை வழியுறுத்துகின்றது. மத்திய வங்கியானது தொடர்ந்தும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதாரங்களையும் நிதியியல் சந்தை அபிவிருத்திகளையும் கண்காணிப்பதுடன் எதிர்வரவுள்ள காலப்பகுதியில் பொருளாதாரத்தில் பாரிய உறுதிப்பாட்டினை மீள்வலிமைப்படுத்துவதற்கு முனைப்புடன் உதவுவதற்கு பொருத்தமான மேலதிக கொள்கை வழிமுறைகளை எடுப்பதற்கு தயாராகவிருக்கும் அதேவேளை, நெகிழ்வான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் நடுத்தர காலப்பகுதியில் இலக்கிடப்பட்ட 4-6 சதவீத வீச்சிற்கு பணவீக்கத்தினை துரிதமாக திரும்பலடையச் செய்வதை உறுதிசெய்கின்றது.

| **நாணயக் கொள்கை தீர்மானம்:** | **கொள்கை வீதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன மற்றும் நியதி ஒதுக்கு வீதம் மாற்றமடையவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 14.50% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 15.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 4.00% |

**தகவல் குறிப்பு:**

ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க அவர்களின் தலைமையிலான ஊடக மாநாடு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் 2022 யூலை 07ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு நடைபெறுவதுடன் முகநூல் மற்றும் யு ரியூப் (YouTube) என்பவற்றின் வாயிலாக நேரலையாக இடம்பெறும்.

நாணயக்கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2022 ஓகத்து 18ஆம் நாளன்று வெளியிடப்படும்.

## இணைப்பு I

### அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (தற்காலிகமானது)

| பொருளாதார நடவடிக்கைகள் | ஆண்டுக்கு ஆண்டு சதவீத மாற்றம் (அ) | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2020 | | | | | 2021 | | | | | 2022 |
| | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | மூன்றாம் காலாண்டு | நான்காம் காலாண்டு | வருடாந்தம் | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | மூன்றாம் காலாண்டு | நான்காம் காலாண்டு | வருடாந்தம் | முதலாம் காலாண்டு |
| வேளாண்மைகள் | -5.5 | -4.0 | 3.9 | -0.4 | **-1.4** | 6.4 | 11.2 | -2.8 | -3.1 | **2.5** | -6.8 |
| கைத்தொழில்கள் | -4.2 | -18.7 | -0.7 | 1.1 | **-5.3** | 6.0 | 21.6 | -2.0 | 1.4 | **5.6** | -4.7 |
| பணிகள் | 2.8 | -13.1 | 0.5 | 1.0 | **-1.9** | 3.5 | 8.3 | -1.7 | 4.3 | **3.3** | 0.7 |
| மொ.உ.உற்பத்தி | **-0.9** | **-14.8** | **1.5** | **-0.7** | **-3.5** | **4.0** | **16.3** | **-5.8** | **2.0** | **3.3** | **-1.6** |

*(அ) திருத்தப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது. (அடிப்படையாண்டு 2015)*

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

### அட்டவணை 02: பணவீக்கம்

| மாதம் | | நவெ 21 | திசெ 21 | சன 22 | பெப் 22 | மாச் 22 | ஏப் 22 | மே 22 | யூன் 22 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு (2013=100) | 9.9 | 12.1 | 14.2 | 15.1 | 18.7 | 29.8 | 39.1 | 54.6 |
| | தேநுவிசு (2013=100) | 11.1 | 14.0 | 16.8 | 17.5 | 21.5 | 33.8 | 45.3 | - |
| **மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு (2013=100) | 7.0 | 8.3 | 9.9 | 10.9 | 13.0 | 22.0 | 28.4 | 39.9 |
| | தேநுவிசு (2013=100) | 8.8 | 10.8 | 12.9 | 14.1 | 17.3 | 27.9 | 37.7 | - |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்*

## அட்டவணை 03: நாணயத்துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செத் 21 | ஒத் 21 | நவெ 21 | திசெ 21 | சன 22 | பெப் 22 | மாச் 22 (அ) | ஏப் 22 (அ) | மே 22 (அ) |
| ஒதுக்குப் பணம் | 1,296 | 1,286 | 1,288 | 1,306 | 1,337 | 1,324 | 1,387 | 1,482 | 1,415 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 10,488 | 10,582 | 10,546 | 10,647 | 10,668 | 10,755 | 11,576(ஆ) | 11,941 | 11,897 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | (722) | (837) | (906) | (982) | (1,216) | (1,275) | (1,889) | (2,195) | (2,083) |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 11,210 | 11,418 | 11,452 | 11,629 | 11,883 | 12,030 | 13,464 | 14,136 | 13,980 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 5,595 | 5,665 | 5,714 | 5,832 | 6,048(ஆ) | 6,094 | 6,544(ஆ) | 6,548 | 6,499 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 1,123 | 1,194 | 1,185 | 1,188 | 1,192 | 1,238 | 1,548 | 1,725 | 1,750 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 6,825 | 6,860 | 6,920 | 6,981 | 7,017 | 7,051 | 7,533(ஆ) | 7,753 | 7,754 |
| விரிந்த பணம் ($M_4$) | 12,742 | 12,873 | 12,862 | 12,985 | 13,058 | 13,167 | 13,992 | 14,356 | 14,340 |

அ) 2022 மாச்-மேயில் நாணய மற்றும் கொடுகடன் கூட்டுகளின் ரூபா நியதிகளின் அதிகரிப்பிற்கு 2022 மாச்-மே காலப்பகுதியில் ஏற்பட்ட இலங்கை ரூபாவின் சடுதியான தேய்வு முக்கிய காரணமாகக் காணப்படுகின்றது.

ஆ) திருத்தப்பட்டது.

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

## அட்டவணை 04: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | சன 22 முடிவில் | பெப் 22 முடிவில் | மாச் 22 முடிவில் | ஏப் 22 முடிவில் | மே 22 முடிவில் | யூன் 22 முடிவில் | 2022 யூலை 06இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 5.50 | 5.50 | 6.50 | 13.50 | 13.50 | 13.50 | 13.50 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 6.50 | 6.50 | 7.50 | 14.50 | 14.50 | 14.50 | 14.50 |
| **வங்கி வீதம்** | 9.50 | 9.50 | 10.50 | 17.50 | 17.50 | 17.50 | 17.50 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 6.48 | 6.48 | 7.49 | 14.50 | 14.50 | 14.50 | 14.50 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 8.63 | 8.61 | 12.92 | 23.53 | 23.65 | 23.85 | 28.08 |
| 182-நாள் | 8.55 | 8.53 | 12.25 | 23.96 | 24.22 | 24.40 | 28.74 |
| 364-நாள் | 8.55 | 8.53 | 12.28 | 24.09 | 24.30 | 23.84 | 28.11 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வாராந்தம்) | 8.52 | 8.99 | 9.85 | 16.38 | 22.11 | 22.62 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 10.12 | 10.13 | 10.35 | 11.31 | 13.46 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 9.76 | 10.07 | 10.73 | 13.72 | 20.00 | - | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 5.01 | 5.07 | 5.17 | 5.52 | 6.99 | 8.41 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 6.05 | 6.15 | 6.30 | 6.84 | 8.97 | 11.06 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 6.58 | 6.50 | 7.68 | 15.35 | 16.98 | - | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 6.79 | 6.75 | 8.06 | 15.63 | 17.19 | - | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*